சார்பு நீதிமன்றம், குளித்தலை

MCOP NO. **329 /2019**

பெயர்: வைரபெருமாள் ம.சா. 1 தேதி **05.09.2024**

<u>குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>

நான் மேற்கில் இருந்து கிழக்கு நோக்கி வந்து எவ்வித சிக்னலும் செய்யாமல் திடீரென சாலையின் தெற்கு புற ஓரத்திற்கு வானகத்தை திருப்பி தாவா விபத்தை ஏற்படுத்திவிட்டேன் என்றால் சரியல்ல. விபத்து எனது கவனக்குறைவால் மட்டுமே ஏற்பட்டுள்ளதால் நான் இழப்பீடு கோர தகுதியற்றவர் என்றால் சரியல்ல. விபத்து சாலையின் மைய பகுதியில் நடைபெற்றதாக ம.சா.ஆ.2 வரைபடத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சாலையின் ஓரத்தில் தான் நடைபெற்றது. மருத்துவ ரசீதுகள் வழக்கிற்காக கூடுதல் தொகைக்கு பொய்யாக பெறப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நான் ஒருநாள் மட்டுமே மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்தேன் என்றால் சரிதான். எனக்கு எவ்வித நிரந்தர ஊனமும் ஏற்படவில்லை என்றால் சரியல்ல. விபத்தில் ஏற்பட்ட காயங்கள் எனக்கு முழுவதுமாக குணமாகிவிட்டது என்றால் சரியல்ல. நான் குறிப்பிடுவது போல் எனக்கு வருமானம் எதுவும் இல்லை என்றால் சரியல்ல. எனவே மனு தள்ளுபடி செய்யப்படவேண்டுமென்றால் சரியல்ல.

<u>மறுவிசாரணை - இல்லை</u>

ஒம்/ K. இன்ப கார்த்திக்,
சார்பு நீதிபதி,
குளித்தலை.